தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 613010
தமிழ்நாடு, தென்னிந்தியா
தொ.பே.எண் : 04362 – 227151
மின்னஞ்சல் : coetamiluniv@gmail.com
தொலைநகலி : 04362-226159

THE TAMIL UNIVERSITY
THANJAVUR – 613010
SOUTH INDIA, TAMIL NADU
TELEPHONE : 04362 - 227151
EMAIL : coetamiluniv@gmail.com
TELEFAX : 04362-226159

**முனைவர் த. தெய்வீகன்**
தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர் (பொ.)

<u>ந. க. எண்: தே2/2020 நாள் 25.09.2020</u>

பொருள்: இணைய வழி ஆய்வியல் நிறைஞர் (விடுமுறைக்காலத் தொடர்ப் படிப்பு) வாய்மொழித் தேர்வுகள் நடத்துதல்- தொடர்பாக.

பார்வை: துணைவேந்தரவர்களின் ஆணை நாள்: 25.09.2020.

----------

கொரோனா தீநுண்மி பரவலாக்கத்தடுப்புக் கருதி தமிழ்ப் பல்கலைக்கழக ஆய்வியல் நிறைஞர் (விடுமுறைக்காலத் தொடர்ப் படிப்பு) பட்டத்திற்கான வாய்மொழித் தேர்வுகளைத் துறைத்தலைவரே இணையவழியாக உரிய நெறிமுறைகளின் அடிப்படையில் நடத்தி அறிக்கை வழங்குமாறு கனிவுடன் கேட்டுக்கொள்கிறேன். இணைய வழியாகத் தேர்வுகள் நடத்தும் புறநிலை தேர்வாளர்களுக்கு மாணவர் ஒருவருக்கு ரூ.160/- (ரூபாய் நூற்று அறுபது மட்டும்) எனக் கணக்கிட்டு மதிப்பூதியம் வழங்க இதன்வழி அனுமதிக்கப்படுகிறது.

இணைப்பு: ஆய்வியல் நிறைஞர் (விடுமுறைக்காலத் தொடர்ப் படிப்பு) வாய்மொழித் தேர்வுகள் இணையவழியில் நடத்துவதற்கான நெறிமுறைகள்

25/09/20

தேர்வுக்கட்டுப்பாட்டு அலுவலர்(பொ.)

பெறுநர்: அனைத்து துறைத்தலைவர்கள்

நகல்: 1. துணைவேந்தர் செயலகம் 2. பதிவாளர் செயலகம்
3. முனைவர் ஞா. பழனிவேலு, ஒருங்கிணைப்பாளர், விடுமுறைக்காலத் தொடர்ப் படிப்பு
4. சேர்க்கைப் பிரிவு 5. உபரி

## ஆய்வியல் நிறைஞர் (விடுமுறைக்காலத் தொடர்ப் படிப்பு) வாய்மொழித் தேர்வுகளை இணையவழியில் நடத்துவதற்கான நெறிமுறைகள்

கொரோனா தீநுண்மி பரவலாக்கத்தடுப்புக் கருதி தமிழ்ப் பல்கலைக்கழக ஆய்வியல் நிறைஞர் (விடுமுறைக்காலத் தொடர்ப் படிப்பு) வாய்மொழித் தேர்வுகள் இணைய வழியில் நடத்துவதற்கான நெறிமுறைகள்

❖ துறைத்தலைவர் வாய்மொழித் தேர்வு எந்த இணையவழி (செயலி/App) நடத்தப்பட உள்ளது என்ற விவரத்தை அலுவலகத்திற்கும், மாணவருக்கும் ஒரு வாரத்திற்கு முன்னர் தெரிவித்தல் வேண்டும்.

❖ வாய்மொழித் தேர்விற்கான அறிவிப்பில் இணையவழிப் பங்கேற்பதற்கான இணைப்பு முகவரி (Web link) கடவுச்சொல் (Password) போன்றவற்றை தவறாது குறிப்பிட வேண்டும்.

❖ வாய்மொழித்தேர்வு அறிக்கையை வன்படிவமாக அளிக்கும்போது இணைய வழியில் நடைபெற்ற வாய்மொழித் தேர்வின் பதிவை மென்படிவமாகவும் (CD) அளிக்க வேண்டும்.

❖ இணைய வழியில் பங்கேற்ற பங்கேற்பாளர்களின் பட்டியலை நெறியாளர் அனைத்து பக்கங்களிலும் மேலொப்பம் இட்டு அலுவலகத்திற்கு வழங்க வேண்டும்.

❖ புறத்தேர்வாளர்களுக்கு மதிப்பூதியம் ஒரு மாணவருக்கு ரூ.160/- வீதம் மட்டும் வழங்கலாம்.

தேர்வுக்கட்டுப்பாட்டு அலுவலர்(பொ.)